392—

குடியிருப்புகள்

***15142— திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் வாடகை அல்லது தவணை முறையில் பணம் செலுத்தும் குடியிருப்புகள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில், வாடகை அல்லது தவணை முறையில் பணம் செலுத்தும் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. சிவபெருமாள், இருக்கையில் இல்லை. வினா எண் 393, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

393—

திருப்பூரில் குடியிருப்புகள்

***20705— திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் குடிசை மாற்று வாரியம் மூலம் புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

2003 மே 5]

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம், பின்னலாடைத் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஒரு தொழில் நகரமாகும். அந்தத் தொழில் நகரத்தில் தொழில் புரிவதற்காக, தமிழகத்திலிருந்தும், பல பகுதிகளிலேயிருந்தும் மக்கள், அந்த திருப்பூர் நகரத்தை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம், வாடகை வீடு கிடைப்பதற்குக்கூட, கடுமையான வாடகை இருக்கின்ற காரணத்தால், குடிசைகளை அமைத்துக் குடியிருந்து வருகின்றனர். அவர்கள் குடிசைகளை அமைத்துக் குடியிருந்து வருகின்ற காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்தப் பின்னலாடைத் தொழிலினுடைய முன்னேற்றத்திற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் தொழிற்சாலைகளுக்கும், பொது மக்களுக்குமாக மூன்றாவது குடிநீர்த் திட்டத்தையும், புதிய தொழில் பூங்காவையும் அமைத்து, இந்தப் பின்னலாடைத் தொழிலை ஊக்குவிக்கின்ற இந்தக் காலகட்டத்தில், அந்தத் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுடைய வசதிக்காக, அவர்களுடைய குடியிருப்புகளுக்காக புதிய குடியிருப்புகளை குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதன் அடிப்படையிலே, கடந்த 2002-2003 ஆம் ஆண்டில் மத்திய, மாநில அரசுகள் பங்குகொள்கின்ற வால்மீகி அம்பேத்கர் திட்டத்திலே அந்தப் பகுதியிலே 150 வீடுகள் கட்டுவதற்கான பரிந்துரைகளைப் பெற்று அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பயன்பெறுவோர் ஏறக்குறைய 15 பேர்கள் தான், அந்தப் பயன் பெறுவதற்குரிய 10 சதவிகித பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். அந்தவகையிலே, அது கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. தற்போது 7 பயன்பெறுவோர் பணம் கட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே, அதையும் கட்டுவதற்கான நடவடிக்கை எடுத்து, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்றபடி குடிசை மாற்று வாரியத்தின் மூலம் தற்போதைய

[2003 மே 5

நிதிநிலைமைக்கேற்றாற்போல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துகள் பரிசீலிக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலே உள்ள முதலிபாளையம் என்கின்ற கிராமத்தில் வீட்டு வசதித் துறையின் சார்பாக இடங்கள் எடுக்கப்பட்டு, வீட்டு மனைகள் பிரிக்கப்பட்டு, அந்த வீட்டு மனைகள் தற்போது இன்னும் விற்கப்படாத நிலையில் இருக்கின்றன. அவை விற்கப்படாததற்கு, அந்த வீடுகளினுடைய விலைமதிப்பு மிகவும் அதிகமாகிவிட்ட காரணத்தினால், தனியாருடைய வீட்டு மனை விலைகளைக் காட்டிலும், இவற்றின் விலை மிகவும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்த வீட்டு மனைகள் விற்கப்படுவதில்லை. மேலும் உடனடியாக முழுப் பணத்தையும் கட்டி வீட்டு மனைகளைக் கொள்முதல் செய்ய வருகின்றபோது அரசு அதற்குரிய பத்திரத்தைக் கொடுக்க முன்வந்தால், நேரடியாகவே பணம் கட்டி கொள்முதல் செய்வதற்குக்கூட சிலர் தயாராக இருக்கின்றார்கள். எனவே, திருப்பூர், முதலிபாளையத்தில் விற்கப்படாமல் கிடக்கின்ற அந்த வீட்டு மனைகளை மார்கெட் நிலவரத்தை அனுசரித்து, விலைகளைக் குறைத்து விற்க வீட்டு வசதித் துறையின் மூலமாக அந்த வீட்டு மனைகள் விற்கப்படுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர், முதலிபாளையத்திலே வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்ற மனைகளின் விலை உயர்வாக இருக்கின்ற காரணத்தினால் விற்கவில்லை என்ற கருத்துகள் அரசினுடைய பரிசீலனைக்கு வந்துள்ளன. ஆகவே, அந்தப் பகுதியினுடைய விலை மதிப்புக்கு ஏற்றாற்போல அதைச் சரி செய்வதற்காக இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தினுடைய இந்த நிலைகளைச் சீர் செய்வதற்காக ஒரு உயர் மட்டக் கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த கமிட்டியில் இந்தப் பகுதியினுடைய நிலையும் பரிசீலனையில் உள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்தை ஏற்று, அதைச் செய்வதற்கு அரசு ஆவன செய்யும் என்று உறுதி கூறுகின்றேன்.